# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 13.9.2017 | **1)** தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் பொது சுகாதாரம்–டெங்கு காய்ச்சல் நடப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ/மாணவிகளுக்கு முகாம்கள் நடத்தி இலவச நிலவேம்பு குடிநீர் வழங்குவது தொடர்பாக 1000 கிலோ நிலவேம்பு குடிநீர் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. இதற்காக நிலவேம்பு குடிநீர் அரசு சார்பு நிறுவனமான (TAMPCOL) டாம்கால் மூலம் ஒரு கிலோ ரூ.302/– விதம் 1000 கிலோவிற்கு ரூ. 302000/– மற்றும் GST வரி 12 ரூ. 36240/–க்கு வாங்குவதற்கு அனுமதியும், அதற்காகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/5286/15 | 67) அனுமதிக்கப்பட்டது. |
| | **2)**தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான மாசில்லாமணிபுரம் பூங்கா அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பறையானது குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ளதாலும் பல முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் எவரும் உரிமம் கோர முன்வராததாலும் மேற்படி கழிப்பறையானது மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் 22.07.2017 அன்று நேரில் ஆய்வு செய்யப்பட்டது. எனவே மேற்படி நவீன கட்டண கழிப்பறை அமைந்துள்ள இடத்தினை மாநகராட்சியின் இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்திட ஏதுவாக மேற்படி இனத்தினை மாநகராட்சியின் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழங்கப்படும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இனத்தில் இருந்து நீக்கம் செய்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **68)** அனுமதிக்கப்பட்டது. ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுனை அங்கீகரிக்கலாம்.<br><br>அ16/4741/2015 | |
| | 3) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் கடிதம் எண். அ2/10388/2014 நாள் 07/04/2017இல் சுட்டிக்காட்டியுள்ள அரசாணை (நிலை) எண். 60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (1) நாள் 26.06.2013ல் வெளியிடப்பட்ட அரசாணையில் 2013–14ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்க்கும் அரசு கட்டிடங்களில் Roof Top Solar power plant அமைக்க ரூ. 5.00 இலட்சம் மட்டும் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் (ம) பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி அவர்களின் செயலாணை எண். இ2/10388/2014, நாள் 27/08/2015ல் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சோலார் விளக்குகள் (Solar Roof Top) அமைக்கும் பணியினை, தமிழ்நாடு எரிசக்தி முகமையால் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரி நிர்ணயம் செய்யப்பட்ட M/s. prshanya power Solutions, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணியினை கண்காணிப்பதோடு கூடுதல் செலவினம் ரூ. 20000/–ஐ பொதுப்பணித்துறையால் செலவினம் மேற்கொள்ள இயலாது என்பதால், தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள தெரிவித்து தூத்துக்குடி மாநகராட்சிக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டுள்ளது.<br><br>எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விபரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ 5.20 இலட்சத்தில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சோலார் விளக்குகள் (Solar Roof Top) அமைக்கும் பணியினை தமிழ்நாடு எரிசக்தி முகமையால் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கோரி நிர்ணயம் செய்யப்பட்ட M/s.prshanya power Solutions, Madurai என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ 5.00 இலட்சம் போக கூடுதல் செலவினத்தொகை ரூ 20,000/–ஐ தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/5078/2016 | 69) அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 4)தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான சிவன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி திருமண மணடபத்தின் குத்தகை காலம் 31.07.2017 உடன் முடிவடைந்து விட்டது. குத்தகை காலம் முடிவடைவதற்கு முன்னமே முந்தைய குத்தகைதாரர் திரு. பால்ராஜ் என்பவர் 28.06.2017ல் அனுப்பியுள்ள விண்ணப்பத்தில் மேலும் மூன்று வருடங்களுக்கு திருமண மண்டபத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை மாநகராட்சி சட்ட திட்டங்களுட்பட்டு மீண்டும் தனக்கே வழங்கும்படி தெரிவிக்கப்பட்டது.<br><br>அதன்பேரில், மாநகராட்சி மூலம் 30.06.2017 அன்று அனுப்பிய அறிவிப்பில் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன் படி மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் மட்டுமே மூன்றாண்டு தொழுபில் மூன்று தடவைகள் (ஒன்பது ஆண்டுகள்) வழங்கப்படலாம். அரசாணை எண். 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.9.2008ன் படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள் சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்பட வேண்டும். எனவேஇ மேற்கண்ட திருமண மண்டபத்தை மாநகராட்சி சட்ட விதிகளின்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தவிர்த்து முந்தைய உரிமம்தாரருக்கு நேரடியாகவோ உரிம காலம் முடிவற்ற பின்னர் தொடர்ந்து உரிமத்தை புதுப்பித்து வழங்கவோ இயலாது என தெரிவிக்கப்பட்டது.<br><br>இந்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி மூலம் தீர்மான எண் 48 நாள் 30.6.2017 அன்று மேற்படி திருமண மண்டபத்தை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவித்து மாமன்றப்பொருள் நிறைவேற்றப்பட்டு 24.7.2017 ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் எனத் தெரிவித்து 3.7.2017ல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது.<br><br>அதன் பேரில் முந்தைய உரிமம்தாரர் திரு.பொ. பால்ராஜ் என்பவரும் மற்றும் திரு.இரா. அமிர்தகணேசன் என்பவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள 21.7.2017ல் ஒப்பந்தப்புள்ளி நமுனாவை பெற்றுக்கொண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில், முந்தைய உரிமம் தாரர் திரு. பொ. பால்ராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற முதரை கிளை W (M.D) No.13307-2017 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் 20.7.2017ல் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்திக் கொள்ளலாம் என்றும் ஆனால் அதன் முடிவை உறுதி செய்ய தடை விதித்து 25.7.2017ல் நீதிமன்றத்தில் அதன் விபரத்தை தெரிவிக்க | 70) அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தெரிவிக்க;பப;டடு;ளளது. அன்றைய தினத்தில் நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, 31.8.2017ல் குறுகிய கால மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே 31.8.2017ல் குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்பிள்ளி கோர அனுமதிக்கப்பட்டதில் திரு. பொ. பால்ராஜ் என்பவர் கலுந்து கொண்டு ரூ 1200100/–க்கும் மற்றும் திரு.இரா. அமிர்த கணேசன் என்பவர் ரூ. 1200200/–க்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளனர். அதன் விபரம் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளைக்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>இந்நிலையில் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் உத்திரவுப்படி W.(M.D) No.13307/2017 வழக்கு தொடர்பான தூத்துக்குடி மாநகராட்சி சிவன் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி திருமண மண்டப உரிமம் நீதிமன்ற விசாரணையில் மேற்படி வழக்கினைத் தொடுத்த திரு. பொ. பால் ராஜ் என்பவர் வழக்கினை வாபஸ் பெற்றுள்ளதாகவும் மேற்படி இனத்திற்கான உரிமம் தொடர்பாக மாநகராட்சியால் எடுக்கப்படும் நடவடிகைகளுக்கு எவ்வித தடை ஏதும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திரு. அமிர்த கணேசன் என்பவர் மேற்படி திருமண மண்டபத்தை உரிமம் கோர வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி விண்ணப்பத்தில் மாநகராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்த தொகையை விட (அதாவது மாநகராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்த ஓராண்டு உரிமம் தொகை ரூ. 1200000/– உரிமம் தாரர் கோரிய தொகை ரூ 1200200/–) அதிகமாக கோரப்பட்டதால், திரு. அமிர்தகணேசன் என்பவருக்கு 2017–2018 முதல் 2019–2020 வரையிலான மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் மேற்படி நிரூபய மண்டபதில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை வழங்கலாம்.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். அ16/556/2014 | |
| | 5) இம்மாநகராட்சி பகுதிகளில் தற்பொழுது புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதி பொதுமக்களுக்கு பயன்பெறும் வண்ணம் புதிதாக குடிநீர் அபிவிருத்தித் திட்ப் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண். G.O.(D) No.3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC6) நாள் 22.10.2012ன் படி ரூ. 282.44 கோடி மதிப்பீட்டின் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சென்னை, நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியின் ஒப்பந்த விகித தொகை ரூ 266.01 கோடி ஆகும். | 71) அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிகளில் சிப்பம் 1 பணியில் திட்டப் பணிகள் முடிவடைந்த பின்பு திட்ட பணியின் பயன்பாட்டினை கண்காணிப்ப ஏதுவாக Jelemetry/SCD System பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பணியின் ஒப்பந்த நமூனா (Jenda Schedule) வில் Jelemetxy /SCD பணி சேர்க்கப்படவில்லை<br><br>தற்பொழுது மேற்படி திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. திட்டப் பணிகளின் தன்மை, பணி செயல்படும் விதங்களை கணினி மூலம் உயர் அலுவலர்கள் கண்காணிக்க ஏதுவாக தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்டுள்ள Intake well. watger Treatement lant, Transssom Ma, Feeder ma மற்றும் Over Head Ta பகுதிகளில் Telemetry/SCD system அமைக்க மதிப்பீடு ரூ 2.60 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஆகும் செலவின தொகையினை, திட்டத்தின் மொத்த நிர்வாக அனுமதி தொகை ரூ. 282.44 கோடியில் டெண்டர் சேமிப்பு மற்றும் இதர மீதமாகும் தொகை (Savings Mount) இருந்து ஈடு செய்யவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** அனுமதி வழங்கலாம் இ1/ 22751/08–1 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணியில் வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் திட்டப் பணிக்கு அமைக்கப்பட்ட குடிநீர் சுத்தி கரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தில் முன்பக்க நுழைவு வாயில் தடுப்பு சுவர் இல்லாத காரணத்தினால் பாதுகாப்பான சூழல் இல்லை. எனவே மாநகர பொது மக்களின் பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை கருத்திற் கொண்டும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டும் மேற்படி சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தின் முன்புறத்தில் தடுப்பு சுவர் மற்றும் நுழைவு வாயில் அமைக்கும் பணியினை ரூ 45.00 லட்சம் மதிப்பீட்டில் JIC திட்டத்தினை சேமிப்பு நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** குடிநீர் விநியோக பாதுகாப்பு கருதி JIC திட்டத்தினை சேமிப்பு நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/3198/2017 | 72. அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>7) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணியில் வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் திட்டப் பணிக்கு அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தில் சாலை வசதி இல்லாததால், திட்டப் பணி ஆய்வு மேற்கொள்வதில் சிரமம் இருப்பதாலும், மேற்படி இடத்தில் களப்பணி மேற்கொள்ள அலுவலர்கள் செல்வதற்கு ஏதுவாக மேற்படி இடத்தின் நுழைவு வாயிலிருந்து சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் வரை தார்சாலை அமைத்து சாலையின் இருபுறத்திலும் அழகு செடிகள் நடும் பணி மேற்கொள்ளும் பணியினை ரூ. 44.00 லட்சம் மதிப்பீட்டில் JIC திட்டத்தின் சேமிப்பு நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : குடிநீர் விநியோக பாதுகாப்பு கருதி JIC திட்டத்தின் சேமிப்பு நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/3195/2017</td>
<td>73) அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>8) தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளான வார்டு எண்கள் 3,34,48,49 மற்றும் 50 ஆகியவற்றில் அமைந்துள்ள பல குடியிருப்பில் மேற்படி பகுதிகள் மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்னதாக குடிநீர் இணைப்பு எவ்வித அனுமதியின்றி கீழ்க்கண்டவாறு மண்டல வாரியாக எடுக்கப்பட்டது என தொடர்புடைய மேற்கு வடக்கு, மற்றும் மெற்கு மண்டல உதவி ஆணையர் பொறுப்பு வகிக்கும் அலுவலர்கள் முறையே 12.07.2017, 18.07.2017, 21.07.2017 ஆகிய தேதிகளில் அறிக்கை சமர்ப்பித்ததுடன் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோக உப விதி மற்றும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறையால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண் 65 நாள் 12.04.2010ன் படி முறைப்படுத்தலாமென அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டு எண்</th><th>அனுமதிறயற்ற குடிநீர் குழாய்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>3</td><td>1425</td></tr>
<tr><td>2</td><td>34</td><td>2016</td></tr>
<tr><td>3</td><td>48</td><td>1065</td></tr>
<tr><td>4</td><td>49</td><td>1512</td></tr>
<tr><td>5</td><td>50</td><td>828</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>6846</td></tr>
</table>
மேற்படி அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பாக மேற்சொன்ன அரசாணை விபரம் பின்வருமாஙற</td>
<td>74) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**சுருக்கம்**

குடிநீர் விநியோகம் – மாநகராட்கிள் (சென்னை நீங்கலாக) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் அனுமதிபெற்ற வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பல்லவபுரம் நகராட்சியில் அனுமதியற்ற வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துவது தொடர்பாக ஒவ்வொரு வீட்டிணைப்பிற்கும் ரூ. 5000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) அபராதத் தொகையாகவும் செலுத்தப்பட வேண்டும் எனவும். மற்றும் அனுமதியற்ற ஒவ்வொரு வர்த்தக மற்றும் இதர இணைப்பிற்கும் ரூ. 10,000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வைப்புத் தொகையாகவும் அத்துடன் ரூ. 5000/. (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) அபராதத் தொகையாகவும் செலுத்தப்பட வேண்டும் எனவும், இனிமேல் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் ஏற்படாவண்ணம் கண்காணிக்கும் பொறுப்பு மற்றும் அதிகாரம் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் உள்ள அனுமதியற்ற வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஆணைகள் வெளியிட நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் அனுமதியற்ற இணைப்புகள் மீது நடவடிக்கை எடுகும் போது சில நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அபராதத் தொகையைப் பொறுத்த வரையில் அனைத்து வகை இணைப்புக்கும் ரூ. 5000/– என்பதற்கு பதிலாக வீட்டிணைப்புக்கு ரூ.3000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) என்றும், ஏனைய இனங்களுக்கு ரூ.50000/– (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) என்றும் அபராதம் விதிக்க வேண்டும் என்றும் நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புக்கு பொறுப்பானர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகர்ப்புள உள்ளாட்சி அமைப்பு மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீட்டுக்குடிநீர் இணைப்புகள் உடனடியாக வழங்குவது குறித்து கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | 1)குடிநீர் இணைப்புகளுக்கு அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டண விதிகளுக்கு உட்பட்டு, எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி குடிநீர் இணைப்புகள் பெற விண்ணப்பிக்கும் அனைவருக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.<br><br>2)விண்ணப்பங்கள் பெறப்பட்ட ஏழு நாட்களில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.<br><br>3)தொழில்நுட்ப காரணங்களினால் குடிநீர் இணைப்புகள் வழங்க முடியாத தெருக்கள்/பகுதிகளில் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்கும் தொழில் நுட்ப காரணங்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.<br><br>4) ஒவ்வொரு மாதமும் எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் எவ்வளவு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன என்ற விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையரும் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.<br><br>(4) நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 28.02.2001ம் நாளிடப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகை மிக குறைவாக உள்ளதாக கருதுவதாலும், இனி வருங்காலங்களில் அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தவும், நகராட்சிகளில் அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தவும், நகராட்சிகளில் அனுமதியற்ற குழாய் இணைப்புகள் முறைப்படுத்தப்படும் பொழுது குடிநீர் குழாய் இணைப்பு துணை விதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டு வைப்புத்தொகையுடன் அந்தந்த இனங்களுக்குரிய (வீட்டு இணைப்புகள் மற்றும் இதர இணைப்புகள்) வைப்புத்தொகைக்கு இரு மடங்கு தொகையை அபராத கட்டணமாக வசூலிக்க ஆணை வழங்க கோரியுள்ளார். மேலும் தமது 26,4,2006ம் நாளிட்ட கடிதத்தில் முறையற்ற வகையில் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீட்ட உபயோக இனத்திற்கு அபராத தொகையாக உள்ள ரூ3000/–க்கு பதிலாக ரூ.6000/–ம் வீட்டு உபயோகமில்லாத இனத்திற்கு ரூ.5000/–க்கு பதிலாக ரூ. 10000/–ம் (இருமடங்காக) நிர்ணயிக்கவும், இதன்படி அபராதம் விதிக்க குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான வைப்புத் தொகையை கணக்கிலெடுக்காமல் பேராதத் தொகையை உயர்த்தி நிர்ணயிக்க வலிறுத்தியும், தற்பொழுது அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் மக்கள் | |

| | | |
|---|---|---|
| | தொகை வெகுவாக பெருகிவரும் சூழ்நிலையில் குடிநீரின் தேவை அதிகமாகவும் ஆனால் வழங்கப்படும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீர் ஆதாரம் குறைந்து வரும் நிலை உள்ளதாலும், நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாத வகையில் நுகர்வோருக்கு முறையாக குடிநீர் வழங்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் முறையற்ற வகையில் குடிநீர் குழாய் இணைப்புகளை வைத்திருப்போரை தண்டிக்கும் முகமாக இரு மடங்கு வைப்புத்தொகை போன்று கூடுதல் தொகையினை அபராதமாக வசூலிப்பதால் தவறுகளை நீக்க வாய்ப்பு ஏற்படும் எனவும் மேலும் முறையற்ற இணைப்பு கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து இதனை கண்டுபிடிக்கும் காலம் வரை கணக்கிட்டு அதற்குண்டான உரிய குடிநீர்க் கட்டணம் மற்றும் அபராத தொகை வசூலிக்கவும் வலிறுத்தி ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டு கொண்டுள்ளார்.<br><br>5) மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது 30.10.2009ம் நாளிட்ட கடிதத்தில் தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் சமீபத்தில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு துண்டிப்பு செய்ததாலும் இவற்றை முறைப்படுத்தக் கோரிக்கை தொடர்ந்த வருவதாலும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்துமாறு திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், எனவே மாநகராட்சிகளிலும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம். அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு பொறுப்பானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் தக்க திருத்தம் அளித்து அரசாணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.<br><br>6) மேலே பத்தி 3ல குறிப்பிடப்பட்ட சூழ்நிலை மற்றும் அனுமதியற்ற வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகளைமுறைப்படுத்துவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துரு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சி இயக்குநர் ஆகியோரிடம் கலந்தாலோசனை ஆகியவற்றின் அடிப்படையில் இச்செயற்குறிப்பை அரசு பல்வேறு அம்சங்களையும் கருத்தில் கொண்டு கவனமுடன் ஆய்வு செய்த பின்னர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 81 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.06.2002க்குப் பின் வரும் திருத்திய ஆணைகளை வெளியிடுகிறது.<br><br>(i) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தற்போதுள்ள அனுமதியற்ற வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகளை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளால் தற்போது வசூலிக்கப்படும் வைப்புத்தொகையைப் போன்று இரு மடங்கு வசூலித்தபின் முறைபடுத்த வேண்டும். | |

(ii) இந்த நடைமுறையை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மட்டுமின்றி, (சென்னை மாநகராட்சி நீங்கலாக) அனைத்து மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

7) இத்திட்டத்தினை இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் செயல்படுத்தி அனுமதியற்ற வீட்டுக் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துமாறும் இது குறித்து அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

மேற்படி அரசாணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி கீழ்க்கண்டவாறு மேற்படி அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளுக்கான கட்டிட உரிமையாளர்களுக்கு 27–4–2012 அன்று ஆணையர் ஒப்புதல் பெற்று மாநகராட்சி மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) வைப்புத்தொகையில் இரு மடங்கு | ரூ.6000.00 |
| 2)குழாய் இணைப்பு பதிவு கட்டணம் | ரூ. 100.00 |
| 3)மேற்பார்வை கட்டணம் (15%) | ரூ. 185.00 |
| 4)குழாய் அடைப்பு திறப்பு கட்டணம் | ரூ. 416.00 |
| | ---------- |
| | ரூ. 6701.00 |
| | ---------- |

முறைப்படுத்த முடிவு செய்யப்பட்ட மேற்படி அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளுக்கு முறைப்படத்த மாநகராட்சி அலுவலகம் மூலம் அறிவிப்பு அனுப்பி தொடர்புடைய வீட்டு உரிமையாளர்களால் மேற்படி தொகைகள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டும் இதுவரை மேற்படி இணைப்புகள் முறைபடுத்தாமல் இருந்து வருகிறது இது தொடர்பாக ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு மண்டல அரசாணை இம் மாநகராட்சி அலுவலகங்களில் பொறுப்புவகிக்கும் உதவி ஆணையர் அவர்களின் அறிக்கை அரசாணை மாநகராட்சி அறிவிப்பு மற்றும் குடிநீர் விநியோக உப விதி ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு முறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | (1) அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளை முறைப்படுத்துவது தொடர்பாக அரசாணையில் வரிசை எண். 6 (i) மற்றும் (ii) ல் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நடைமுறைகளின் படியும் மேற்கு, வடக்கும மற்றும் தெற்கு மண்டலங்களின் உதவி ஆணையர் பொறுப்பு வக்கும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 12.07.2017 18.07.2017, 21.07.2017 கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியற்ற 6846 குடிநீர் இணைப்புகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரசீது எண்கள், இவ்வலுவலக ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில் 27.04.2012 முதல் முறைப்படுத்திடவும், | |
| | (2) மேற்படி அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணங்களை 27.04.2012 முதல் மேற்படி பகுதியில் நிறைவேற்றப்படும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய குடிநீர் திட்டத்தின் கீழ் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதம் ர 30/– என்ற குடிநீர் கட்டண விகிதத்தி கேட்பு எழுப்பிடவும் 4வது பைப்லைன் திட்டம் மூலம் புதுக்குழாய் இணைப்பு வழங்கிய பின்பு மாநகராட்சிக்கான குடிநீர் உபவிதிகளில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி அதனடிப்படையில் குடிநீர் கட்டணம் வசூல் செய்யவும்.<br><br>(3) மேற்படி இணைப்புகளை 27.04.2012 முதல் முறைப்படுத்துவதால் மாநராட்சியால் ஏற்கனவே வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளாக கருதி தற்போது குடிநீர் அபிவிருத்தி திட்ட பணி (4வது பைப்லைன்) மூலம் இணைப்புகள் வழங்குவதற்கும் தற்போது ஏற்கனவே உள்ள குடிநீர் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு மாநகராட்சி குடிநீர் விநியோக உப விதியின் படி என்ன நடைமுறை பின்பற்றப்படுகிறதோ அதே நடைமுறையை பின்பற்றிடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். இ3/6725/2012 | |
| | 9)தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூராகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த 1500 (ஆயிரத்து ஐநூறு) தெரு நாய்களுக்கு 1 நாய்க்கு ரூ,445/– வீதம் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியு மேலும் | 75) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இப்பணியினை இதற்கு முன்பு பார்த்து வந்த மெசர்ஸ் ராஜேஸ்வரி கோசலா என்ற நிறுவனத்திடம் மேற்கொள்ள அனுமதியும், அதற்காகும் செலவுத்தொகை ரூ. 6,67,500/—ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றத் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/11648/10 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 13.09.2017

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 19.9.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள 5 கிராம பஞ்சாயத்து பகுதிகளில் மழைகாலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் சாலைகளில் தேங்கும் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு சீரான வாறுகால வசதி இல்லாததால், மேற்கண்ட பகுதிகளை இணைத்து ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றினை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் சென்னை (TNUIFSL) மூலம் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் தனது எண். 121 30/10/2014இல் அனுமதி அளித்துள்ளது.<br><br>அதன் பேரில் மெசர்ஸ், சன்கான் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிட் புனே என்ற நிறுவனம் மூலம் (Phase-1) மழைநீர் வடிகால் பணிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி, மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை லிமிட், சென்னை அவர்களின் கடிதம் நாள் 19/09/2017இல் தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் ( TNUSDP) கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள நிதி ஆதாரம் மற்றும் நிபந்தனைகளின் விபரப்படி உலக வங்கி நிதி ஆதாரத்துடன் ரூ. 96.12 கோடி மதிப்பீட்டில் கடன் மற்றும் மான்யம் பெற்று செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. | 76)அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 2) இம்மாநகராட்சியில் தற்பொழுது புதிதாக இணைக்கப்பட்ட மாநகராட்சிகளுக்கு சேர்த்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக JICA (Japan International Cooperating Agency) நிதி உதவி பெற்று புதிய குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ 282.44 கோடி மதிப்பீட்டிற்கு அரசாணை G.O. Ms.No (4D) No.3 MA & WS Department (Mc6) நாள் 22.10.2012ன்படி நிர்வாக அனுமதி | 77) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்டது. மேற்படி பணிகள் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிகளின் மொத்த ஒப்பந்த தொகை ரூ 266.01 கோடி ஆகும். தற்பொழுது நடைபெற்ற பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகளுக்கு மொத்த செலவின தொகை ரூ. 248.74 கோடி ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகையில் இருந்து சேமிப்பு தொகை உத்தேசமாக ரூ 33.70 கோடி ஆகும்.<br>தற்பொழுது மேற்படி திட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் பணிகள் நடைமுறைக்கு நடைமுறைக்கு வரும் போது ஏற்படும் சிரமங்களினை தவிர்க்க ஏதுவாக சில அத்திவசிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதன் விபரங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. | |

| | (தொகை ரூ.கோடி) | சதவீதம் (%) |
|---|---|---|
| 1) கடன் தொகை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDP) | 9.61 | 10 |
| 2) மான்யம் (Project Sustainablity Grant Fund-PSGF) உலக வங்கி நிதியுதவியுடன் ( TNUSDP) | 76.90 | 80% |
| 3) மாநகராட்சிப் பங்கு தொகை | 9.61 | 10 % |
| மொத்தம் | 96.12 | 100 % |

1) மேற்கண்ட திட்ட மதிப்பீடு ரூ. 96.12 கோடிக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி திட்டத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலம் நிர்வாக அனுமதி பெறுவதற்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி திட்டத்தினை செயல்படுத்த அரசு விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும்,
4) மேற்படி திட்டப்பணி செயலாக்கத்தை மேலாண்மை செய்வதற்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி ஆதார வளர்ச்சி திட்டத்தின் ( TNUSDP) மூலம் திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் நியமனம் செய்ய கோர மன்றம் அனுமதிக்கலாம்.
5)மழைநீர் வடிகால் பணி Phase-1 திட்டப்பணியினை ரூ. 96.91 கோடியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

6) திட்டப்பணியில் மொத்த மதிப்பீட்டில் 10 தோகையான ரூ. 9.61 கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
7) திட்டப் பணி துவக்கப்பட்ட நாளது தேதி (Interest During Construction - IDC) மேற்கண்ட பணிக்கான கடன் தொகை மீதான வட்டியினை மாநகாட்சி பொது சிதியிரிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,
8) மேற்கண்ட திட்டத்திற்கான நிர்வாக அனுமதி அரசிடமிருந்து பெறும்பட்சத்தில் கடன் மற்றும் வட்டியினை முழுவதுமான திரும்பச் செலுத்தும் வரை மாநில நிதிக்குழு ஆணையத்தால் (SFC) வழங்கும் தொகையில் பிடித்தம் செய்து திரும்ப செலுத்துவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அதிகாரம்

வழங்கிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

9)மாநகராட்சி நிதி ஆதாரத்தை பெருக்க நீண்ட கால அடிப்படையில் தக்க நடவடிக்கையினை மேற்கொண்டு இரண்டு ஆண்டுகளில் அதனை செயல்படுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

10)ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சியில் தயார் செய்யப்படும் செலவு திட்ட அறிக்கையில் மழைநீர் வடிகாலினை பராமரிக்க பொது நிதியில் தொகை ஒதுக்கீடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம் இ1 /9047/2014

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இம்மாநகராட்சி மூன்றாவது குடிநீர் குழாயில் (வல்லநாடு நீரேற்றும் நிலையம் முதல் தெப்பம் வரையிலான பம்பிங் குழாய்) பழுதுபட்ட 700 எம்எம் PSC குழாய்கள் மற்றும் 400 எம் எம் C1 குழாய்களுக்கு பதிலாக அதே அளவு விட்டமுள்ள இரும்பு குழாய்கள் ( MS pipes ) முறையே 3.5.கி.மீ. மற்றும் 1.00 கி.மீ. நீளம் மாற்றுதல். | 475.00 |
| 2 | புதிய குடிநீர் திட்டப் பணிகளின் எல்லா சிப்பம் பணிகளுக்கும் SCADA (Supervisory Control and Data Acquisition) அமைத்தல் | 260.00 |
| 3 | புதியதாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலை தொட்டிகளினை சுற்றிலும் 22 எண்ணங்கள் காம்பவுண்ட் சுவர் கட்டுதல் | 213.10 |
| 4 | நகரின் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் (25கி.மீ.நீளம்) | 155.00 |
| 5 | புதிய குடிநீர் மேல்நிலை தேக்க தொட்டிகள் (3 எண்ணங்கள்) 4.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு ) அமைத்தல் | 150.00 |
| 6 | குடிநீர் சுத்திகரிப்பு நிலைய முகப்பு பகுதியில் காம்பவுண்ட் சுவர் அமைத்தல் | 45.00 |
| 7 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் முன்புறம் நிர்வாக அலுவலகம் வரை தார் சாலை அமைத்தல் | 43.00 |
| 8 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மீதமுள்ள மூன்று பக்கங்களில் காம்பவுண்ட் சுவர் அமைத்தல் | 120.00 |
| 9 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை சுற்றிலும் மீதமள்ள பகுதியில் தார் சாலை அமைத்தல் | 100.00 |
| 10 | மாநகராட்சியின் பகுதியில்ர மழை வெள்ளத்தின் போது சேதமடைந்த பகிர்மான குழாய்களை மாற்றுதல் | 45.00 |
| 11 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கிருமிநாசினி தொட்டி (chlorination contact tank) மேற்கூரை அமைத்தல் | 36.10 |
| 12 | உப்பாத்து ஓடை மற்றும் பி அண்ட் டி காலனி பகுதியில் புதிய குடிநீர் மேம்பாட்டு பணிக்கான இரும்பு குழாய்கள் பதித்தல் | 29.48 |
| 13 | குடிநீர் ஏற்றும் நிலையம் (Intake well ) ல் அமைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் குடியிருப்பினை சுற்றிலும் காமபவுண்ட் சுவர் அமைத்தல் | 10.00 |
| 14 | குடிநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள பெரிய கற்களினை (Quartz stones) பள்ளங்களில் நிரப்பி சமன் செய்தல் | 4.75 |
| 15 | குடிநீர் ஏற்றும் நிலையம் (Intake well) ஊழியர்கள் குடியிருப்புக்கு தண்ணீர் வசதி செய்தல் | 1.30 |
| 16 | மாநகராட்சி பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டதினால் சேதமடைந்த சாலைகளில் தார் சாலையாக பழுது பார்த்தல் | 1525.00 |
| | மொத்தம் | 3212.73 |

| | | |
|---|---|---|
| | | |
| | மேற்படி திட்டப்பணிகளின் மீதமாகும் தொகையில் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரை கோரவும், திட்ட பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் பணியின் அவசர அவசியம் கருதிதிட்டப்பணிக்கு தேவையான பணிகளான வரிசை எண். 3,6,7,11,12,13,14 மற்றும் 15 பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவின தொகை பொது நிதியின் கீழ் வழங்கப்பட்டதை மேற்படி திட்டத்தில் ஈடு செய்து கொள்ளவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ1/22751/2008 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அடல் மிஷன் (AMRUT) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நி—றுவனம் லிமிட், சென்னை அவர்களின் கடிதம் எண். TUFIDCO/AMRUT/1794/AM(M) 2017-20 நாள் 01.09.2017ஆம் தேதிய கடிதத்தில் அடல் மிஷன் (அம்ருத்) திட்டத்தில் மாநில வருடாந்திர செயல் திட்டம் (SAAP)2017-20ன் கீழ் 2017—18 ஆம் ஆண்டுக்கு பூங்கா பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 3 பூங்காக்களை அபிவிருத்தி பணிகள் ரூ. 273 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், இந்திய அரசு, தமிழ்நாடு அரசு மான்யம் மற்றும் மாநகராட்சி பங்குத்தொகையுடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் லிமிட் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மாநகராட்சி ஆணையர் மற்றும் செயற் பொறியாளர் அவர்களின் அறிவுரைப்படி பட்டியலில் கண்டுள்ள பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள்தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>1. அம்ருத் திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பூங்கா பணிகள் ரூ.273 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், அதற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் பெறப்படும் மான்யத் தொகை ர 191.10 லட்சத்தினை மாநகராட்சி ஆணையர் அவர்கள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 78)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.லட்சத்தில்) | மத்திய அரசு பங்கு தொகை (50%) (ரூ.லட்சத்தில்) | மாநில அரசின் பங்கு தொகை (20%)(ரூ.லட்சத்தில்) | மாநகராட்சி பங்கு தொகை (30%) ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|
| பசுமைப் பகுதி மற்றும் பூங்கா 1)ஜார்ஜ் ரோடு (புல்தோட்டம்) | 122.60 | 136.50 | 54.60 | 81.90 |
| 2) ரோச் பூங்கா அபிவிருங்ததி பணிகள் | 93.00 | | | |
| 3)சங்கரநாராயணன் பூங்கா அபிவிருத்தி பணிகள் | 57.40 | | | |
| மொத்தம் | 273.00 | 136.50 | 54.60 | 81.90 |

2. அடல் மிஷன் (AMRUT) வழிகாட்டுதல் படியும், மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி திட்டம் செயல்படுத்த அனமதி வேண்டப்படுகிறது.

3. தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்ததால் அனுமதிக்கப்படும் மேற்படி திட்டத்தில் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன் பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் திட்டம் நிறைவேற்றுதலில் மாநகராட்சி நிர்வாகத்தால் எடுக்கப்படும் அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

4. மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நிதி ஆதாரங்களின்படி அம்ருத் திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சியில் பட்டியலில் கண்டுள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள பூங்கா அமைத்திடவும் வரிசை எண். 2 மற்றும் 3ல் கண்டுள்ள பூங்காக்கள் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவு, மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி பெற பிரேரேணைகள் சமர்ப்பிப்பதற்குடம, திட்ட மதிப்பீட்டில் கூடுதலாகவும் செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் பன்றிகளில் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக பொதுமக்களின் புகார்கள் அடிப்படையிலும், மேலும், தூத்துக்குடி மாநகராட்சி சுகாதார ஆய்வார்கள் அறிக்கையிலும் பன்றித் தொல்லைகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பன்றிகளின் மூலம் நோய்கள் பரவாமல் தடுக்கும் வண்ணமாக பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு, ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு மாமன்ற அனுமதியும் அதற்காகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/4039/2015 | 79)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிப்பறைகளை மட்டும் பயன்படுத்தி வருகின்றனர். திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதில்லை., மேலும் தூத்துக்குடி மாநகராட்சியால் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து பள்ளி மாணவ/மாணவிகளிடம் அவர்கள் படிக்கும் பள்ளிகளிலும் மற்றும் அவர்களது வீடுகளிலும் கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகின்றோம் என உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்ளது. இம்மாநகரில் இயங்கும் சுய உதவிக் குழுக்கள் மூலம் அவர்களது பகுதியில் வசிக்கும் அனைத்து மக்களும் கழிப்பறைகளைத்தான் பயன்படுத்தி வருகின்றோம் என்ற உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்ளது.<br>மேற்படி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் கழிப்பறைகளை தான் 100 விழுக்காடு பயன்படுத்தி வருகின்றனர் என்றும் திறந்தவெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்ற விபரத்தினை மாமன்றத்தின் பார்வைக்கு வைத்திட அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் பதிவு செய்யலாம். எச்3 5390/2016 | 80) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **6)** தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் **30.06.2017 12.07.2017** மற்றும் **10.08.2017** ஆகிய ஆய்வுக்கூட்டங்களில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வருவாயினை பெருக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.<br>மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டிடங்களில் சொத்து வரி குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் சொத்து வரி நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள கட்டிடங்கள் ஆகியவற்றை கண்டறிந்து மறு அளவீடு செய்து சொத்து வரி நிர்ணயம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதன் பேரில் தூத்துக்குடி மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து கட்டிடங்களையும் மறு அளவீடு செய்து அந்தந்த மண்டலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மண்டல மதிப்பின் அடிப்படையில் சொத்துவரி புதிதாக நிர்ணயம் செய்து கணினியில் கேட்புகள் பதிவு செய்து வசூலித்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் அ1/1342/2012 | **81)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டதுளு |
| | **7)** தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், அத்திமரப்பட்டி முத்தையாபுரம் மற்றும் தூத்துக்குடி ரூரல் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு மேற்படி பகுதிகள் மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்னர் நிர்ணயம் செய்யப்பட்டவாறு சொத்து வரியானது ஆண்டிற்கு ஒரு முறை என்ற அடிப்படையில் மேற்படி கட்டிட வரிவிதிப்பாளர்களால் செலுத்தப்பட்டு வந்தது.<br>மேற்படி பகுதிகளுக்கான சொத்துவரியானது மிகவும் குறைவான மதிப்பில் ஆண்டிற்கு ஒரு முறை செலவுத்தப்பட்டு வந்தாலும் மேற்படி பகுதிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வரும் வேளையில் மாநகராட்சியின் இதரப் பகுதிகளைப் போன்று சொத்து வரி நிர்ணயம் செய்திட ஏதுவாக மண்டலங்கள் மற்றும் அதற்கான மதிப்புகள் வகைப்படுத்தப்பட்டு **01.01.2017** முதல் மேற்படி பகுதிகளில் புதிதாக வரிவிதிப்பு செய்யப்படும் வரிவிதிப்புகளுக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யிதடவும் ஏனைய பழைய வரிவிதிப்புகளுக்கு ஆண்டிற்கு ஒரு முறை வசூலிக்கப்படும் சொத்துவரியினை **2017–18**ஆம் நிதியாண்டு முதல் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை வசூலிக்கவும் மாமன்ற தீர்மானம் எண். **107** நாள் **28.12.2016**ல் தீர்மானிக்கப்பட்டது.<br>இந்நிலையில் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் **30.8.2017**ம் தேதிய ந.க.எண். **24687/2011/**ஆர் **1** சுற்றறிக்கையில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் (திருத்தம்) விதி எண் **7/2012**ன் படி மாநகராட்சியுடன் ஊராட்சி பகுதிகள் இணைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி பகுதிகளுக்கு போதுமான அத்தியாவசியப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாலும் மாநகராட்சியின் ஏனைய பகுதிகளுக்கு இணையாக சொத்துவரி கணக்கிடப்பட்டு வசூலிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் **15.10.2017**க்குள் முடிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | **82)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எனவே 28.12.2016ம் தேதிய இம்மாமன்ற தீர்மான எண். 107ல் தீர்மானிக்கப்பட்டவாறு மண்டல மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மேற்படி பகுதிகளில் அமைந்துள்ள வரிவிதிப்புகளின் பரப்பளவிற்கு ஏற்றவாறு சொத்து வரி மறு நிர்ணயம் செய்து கணிணியில் கேட்புகள் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** மாமன்ற அனுமதிக்கலாம். அ1/16231/2012 | |
| | 8. தூத்துக்குடி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 31 வார்டுகளில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 2014ம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு சிப்பங்களுக்கு முறையே டன் ஒன்றுக்கு ரூ 1450/– மற்றும் ரூ 1447/– வீதம் தனியார் துப்புரவு பணியாளர்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>தற்சமயம் மேற்படி தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளும் பணிக்காலம் முடிவடைந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வலுவலக கடிதத்தின் மூலமாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ 1550 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பிரேரணையில் 16 நுண் உரக்கிடங்கு மையங்கள் (Decentralized Micro Composting) மற்றும் 74 டிப்பர் வாகனங்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி நகராட்சியாக இருந்த போது 434 துப்புரவு பணியாளர் பணியிடம் அனுமதிக்கப்பட்டு தற்போது 225 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள்.<br><br>எனவே, முதல் சிப்பம் வார்டு எண். 4, 6, 13, 20, 25, 32, 33 வார்டுகளுக்கும் மற்றும் இரண்டாவது சிப்பம் வார்டு எண். 35, 36, 37, 42, 43, 44, 46, 47 ஆகிய வார்டுகளுக்கு அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கு துறை நாள் 30.04.1997ன் படி (323+373) 696 துப்புரவு பணியாளர்கள் தேவைஎனக்கணக்கிடப்பட்டுள்ளது.<br><br>தற்சமயம் மேற்படி பிரேரணையில் சிறு திருத்தமாக மேற்படி வார்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் 420 துப்புரவு பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும், சிப்பம் 1க்கு 210 துப்புரவு பணியாளர்கள் வீதம் மாத செலவினம் ரூ. 15.34 இலட்சமும், ஆண்டு செலவினம் ரூ 184.10 இலட்சம் ஆகும். என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செலவினமானது தற்போது மேற்படி வார்டுகளுக்கான தனியார் துப்புரவுப் பணிக்கென செலவிடப்படும் தொகையான ரூ 576 இலட்சத்தினை விட மிகவும் குறைவானதாகும். | 83 அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எனவே, திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மூலம் மேற்படி துப்புரவு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொத நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/2275/17 | |
| | **9.** தூத்துக்குடி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் தனியார் ஒப்பந்தாரர் முலம் **31** வார்டுகளில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தனியார் ஒப்பந்ததாரர் மூலம் **2014**ம் ஆண்டு ஒப்பந்த அடிப்டையில் ஒரு சிப்பம் முறையே டன் ஒன்றுக்கு ரூ **1450/–** வீதம் தனியார் துப்புரவு பணியாளர்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்சமயம் மேற்படி தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்பரவு பணி மேற்கொள்ளும் பணிக்காலம் முடிவடைந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வலுவலக கடித்தின் மூலமாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டு பணிகளுக்கு ரூ **1550** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பிரேரணையில் **16** நுண் உரக்கிடங்கு மையங்கள் (Decentralized Micro Composting) டிப்பர் வாகனங்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சி நகராட்சியாக இருந்த போது **434** துப்புரவு பணியாளர் பணியிடம் அனுமதிக்கப்பட்டு, தற்போது **225** துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள்.<br>எனவே ஒரு சிப்பம் வார்டு எண். **12, 21, 24, 26, 40, 41** ஆகிய வார்டுகளுக்கு அரசாணை எண் **101** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் **30.04.1997**ன் படி **285** துப்புரவு பணியாளர்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.<br>தற்சமயம் மேற்படி பிரேரணையில் வார்டுகளுக்கு திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் **210** துப்புரவு பணியாளர்களை அமர்த்திக் கொள்ளவும், சிப்பம் **1**க்கு **210** துப்புரவு பணியாளர்கள் வீதம் மாத செலவினம் ர **15.34** இலட்சமும், ஆண்டு செலவினம் ரூ. **184.10** ஆகும் என மதிப்பிட்டுள்ளது. மேற்படி செலவினமானது. தற்போது மேற்படி வார்டுகளுக்கான தனியார் துப்புரவுப் பணிக்கென செலவிடப்படும் தொகையான ரூ **284.12** இலட்சத்தினை விட மிகவும் குறைவானதாகும்.<br><br>எனவே, திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மூலம் மேற்படி துப்புரவு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்1/2275/17 | **84)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **10.** தூத்துக்குடி மாநகராட்சி திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் **31** வார்டுகளில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்சமயம் மேற்படி தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளும் பணிக்காலம் முடிவடைந்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் மூலமாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டு பணிகளுக்கு ர **1550** இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பிரேரணையில் **16** நுண் உரக்கிடங்கு மையங்கள் (Decentralized Micro Composting) மற்றும் **74** டிப்பர் வாகனங்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>எனவே, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் **74** டிப்பர் வாகனங்களைக் கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ளும் பொருட்டு **74** வாகனங்களு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் **74** ஓட்டுனர்கள் நாள் ஒன்றுக்கு ரூ **325/–** வீதம் மாதம் ரூ. **7.25** இலட்சமும், ஆண்டுக்கு ரூ. **86.58** இலட்சம் அகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.<br>எனவே, திடக் கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி தினக்கூலி அடிப்படையில் **74** வாகன ஓட்டுனர்களை அமர்த்திக் கொள்ளவும் அதற்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **85)** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **11.** தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் முதற்கட்டமாக பாதாளச் சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த **2005**ம் ஆண்டில் தமிழக அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டம் நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இதில் முதல் மூன்று சிப்ப பணிகள் கழிவு நீர் குழாய்கள் அமைப்பதற்கும் நான்காவது சிப்பம் பணி **24** MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் குழாய்கள் அமைப்பதற்கும், வழிவகை செய்யப்பட்டது. புல்தோட்டம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ **17.99** கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில் **2009**ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த ஆட்சேபனையின் காரணமாக மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்ட நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வெளியேற்றுவதற்கான அனுமதி வழங்கப்படாததால் மேற்படி பணியானது துவக்கப்படவில்லை.<br>இந்நிலையில் **24** MLD கொள்ளளவு உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை DEFOT (Design Build Finance Operate and Transfer) முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண். **147** நாள் **20.03.2013**ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து **24** MLD திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை OEG 7 WABAG நிறுவனமானது ரூ **10.00** இலட்சத்தினை மறைமுக மான்யமாக மாநகராட்சிக்கு | **86)**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செலுத்தியதன் அடிப்படையில் DBFOT முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் செயற் பொறியாளரால் கையொப்பமிடபபட்ட 02.08.2013ல் ஒப்பந்த பத்திரம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.<br>மேற்படி பணிக்கு 02.08.2013 ஒப்பந்தப்பத்திரம் இறுதி செய்யப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் பணியினை ஆரம்பித்து ஆரம்பக் கட்ட பணி மட்டும் நடைபெற்றது அதன் பின் தொடர் பணியினை மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி நிறுவனத்திற்கு 02.08.2013 முதல் 28.03.2016 வரையிலான காலத்தில் பலமுறை பணியினை மேற்கொள்ள அறிவிப்பு வழங்கியும் பணியில் முன்னேற்றம் எதுவும் இல்லை. இறுதியாக ஒப்பந்தவிதிகளின்படி 28.03.2016ல் இறுதி எச்சரிக்கை அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பின்படி மேற்படி நிறுவனம் அனுப்பிய பதில் திருப்பதிகரமாக இல்லாததால் இம்மாநகராட்சி கடித எண். இ3/11512/2007 நாள் 27.07.2016ன் படி DEG & WABAG நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.<br>மேலும் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்துவது குறித்து இவ்வலுவலக இ3/11512/2007 எண்ணிட் 05.08.2016 தேதிய கடிதம் வாயிலாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்படி திட்டத்தினை ஆய்வு செய்து செயற்பொறியாளர் கழிவுநீர் கோட்டம், தூத்துக்குடி அவர்களின் 51016/F/TCNUGSS/STP/JDO/2016 எண்ணிட்ட 05.10.2016 தேதிய கடிதத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ. 40.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில், சென்னை நகாட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17817/2013/UGSS எண்ணிட்ட 11.05.2017 தேதிய கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள M/s. வேதாந்தா தாமிர ஆலை 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்து அதனை மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மேற்படி கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து கிடைக்கப்பெறும் நீரினை மேற்படி நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையிலும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ள மேற்படி நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தூத்துக்குடி மாநகராட்சியில் உற்பத்தியாகும் கழிவுநீரினை (Raw Sewage) தொழிற்சாலைகள் தாங்களாகவே சுத்திகரிப்பு செய்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை தொழிற்சாலைகள் பயன்படுத்த ஏதுவாக மாநகராட்சியால் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே அத்தகைய தொழிற்சாலைகள் தாங்களாகவே முன்வந்து விருப்ப கேட்பு முறையில் மேற்படி பணியினை DBFOT திட்ட முறையில் மேற்கொள்ளவும் அதற்காக தேவைப்படும் அனைத்து துறையின் அனுமதியினை மேற்படி தொழிற்சாலைகளே பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் 07.07.2017 ம் தேதிய விரும்ப கேட்பு அறிவிப்பில் கோரப்பட்டது. | |

| | | |
|---|---|---|
| | மேற்படி விருப்ப கேட்பின் அடிப்படையில் மெசர்ஸ் வேதாந்தா நிறுவனம் மட்டுமே மேற்படி கழிவுநீரை ஒரு மில்லியன் லிட்டருக்கு ரூ 1250/– வீதம் மாநகராட்சிக்கு வழங்குவதாவும் நாள் ஒன்றுக்கு 12 மில்லியன் லிட்டர் கழிவுநீரை எடுத்துக்கொள்வதாகவும் அதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி தொடர்பான விபரங்களுடன் விருப்ப கேட்பு கடிதம் வழங்கியுள்ளது.<br>மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பிரேரணையின் படி மேற்படி நிறுவனத்திற்கு கழிவு நீரை வழங்குவதால் மாநகர கழிவு நீரானது மேற்படி நிறுவனம் மூலம் வெளியேறுவதுடன் சுற்றுப்புற சுழல் மாசுபாடு மற்றும் பொது சுகாதார பிரச்சனைகள் தீருவதற்கு வாய்ப்பாக அமையும். தூத்துக்குடி மாநகரப்பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததால் கழிவுநீர் மழுவதும் மழைநீர் வடிகாலில் செல்கிறது. இதனால் பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது. தற்போது ஒரு சில இடங்களில் பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படும் நிலையில் 5 MLD கழிவுநீரானது பக்கிள் ஓடைக்கு அனுப்பப்படுகிறது. இதன் மூலம் அவ்வப்போது பொது சுகாதாரப்பிரச்சனைகளும் எழுகின்றது. பாதாளச்சாக்கடை திட்டமானது 2005ம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது அடுத்த ஆறுமாதத்திற்குள் மேற்படி பணியானது செயல்படும் வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. தற்போது கழிவுநீரை வெளியேற்றுவதற்கும் சுத்திகரிப்பதற்கும் வழிவகை இல்லாததால் பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் முடிவடைந்தும் திட்டம் செயல்படுத்த இயலாத சூழல் எழுந்துள்ளது. அதனால் மாநகராட்சிக்கு பெருமளவில் நிதியிழப்பு ஏற்படும் நிலை மணும் சுகாதாரப்பிரச்சனைகள் ஏற்படும் நிலை உள்ளது.<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்திடும் பணிக்கு ரூ. 40 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியானது ஏற்கனவே பல்வேறு திட்டங்களின் வாயிலாக கடன் பெற்றுள்ள நிலையில் பெருமளவு செலவினத்தை ஏற்க இயலாத நிலை உள்ளது. மேற்படி காரணத்தினால் 24 MLD திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் DBFOT முறையில் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண் 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கழிவு மூலப் பொருளை (Raw Sewage) நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தொடர்ந்து பராமரிப்பு பணி தொடர்பான செலவினங்களில் இருந்து மாநகராட்சி விடுபட ஏதுவாக அமையும்.<br>கழிவு மூலப் பொருள் விற்பனைக்கான விருப்ப கேட்பு கடிதம் DBFOT முறையில் 07.07.2017 அன்று கோரப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் ஏனைய நகராட்சி மாநகராட்சிகளில் மற்றும் சென்னை மெட்ரோ வாட்டர் ஆகிய நிறுவனத்தின் கழிவு மூலப்பொருள்கள் (Raw Sewage) விற்பனை செய்வதாக தெரியவில்லை. ஆகையால் கழிவு மூலப் பொருளுக்கான சந்தை மதிப்பு மற்றும் வருங்கால சந்தை மதிப்பு அறிய இயலவில்லை. மேலும் DBFOT முறையின்படி தொடர்ச்சியாக 30 ஆண்டுகளுக்கு கழிவு நீருக்கான சந்தை மதிப்பு முன்கூட்டியே நிர்ணயம் செய்வதால் | |

| | | |
|---|---|---|
| | மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும். மேற்படி காரணத்தினால் கழிவுநீர் மூலப்பொருளை (Raw Sewage) Secondary Treatment Effluent water மாதிரியாக நேரடியாக தொழிற்சாலை நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் மூலம் கழிவு மூலப் பொருள்களுக்கு (Raw Sewage) குறிப்பிட்ட காலத்திற்கு விலை மறு நிர்ணயம் செய்ய இயலும் என்பதால் மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும். தூத்துக்குடி மாநகரப் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததாலும், கழிவு நீர் முழுவதும் மழைநீர் வடிகாலில் செல்வதாலும் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. மேலும் ஒரு சில இடங்களில் பாதாளச்சாக்கடைத் திட்டத்திற்கு 2005ஆம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது அடுத்த ஆறுமாதத்திற்குள் மேற்படி பணியானது செயல்படத்துவங்க சுத்திகரிப்பதற்கும் வழிவகை இல்லாததால் பாதாளச்சாக்கடைத்திட்டப் பணிகள் முடிவடைந்தும் திட்டம் செயல்படுத்த இயலாத சூழ்நிலையால் மாநகராட்சிக்கு பெருமளவில் நிதியிழப்பு ஏற்படும் நிலை மற்றும் சுகாதாரப்பிரச்சனை ஏற்படும் நிலை உள்ள காரணத்தினாலும் கழிவுநீரை நேரடியாக விற்பனை செய்வது மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும் என்ற காரணத்தினாலும் கழிவு நீர் மூலப்பொருளை நேரடி விற்பனை செய்வதற்கு ஏதுவாக மறு விருப்ப கேட்பு (Revised EOI) கோருவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>கழிவு நீர் விற்பனையால் கிடைக்கும் முழு வருவாயும் பாதாளச் சாக்டைத்திட்ட பராமரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளதால் நேரடி விற்பனை (Direct Sale ) Model ல் (Revised EOI) மறு விருப்ப கேட்பு கோருவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம். இ3/011512/07 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 19.9.2017